# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 6/2018

இந்நீதிமன்றத்து இளநிலை உதவியாளர் திருமதி சி. நிர்மலா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கங்காதரன் | மதம் | : இந்து |
| த/பெ | : மும்மன் | ஜாதி | : -- |
| வயது | : 71 | கிராமம் | : எட்டியத்தாங்கல் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**16.09.2025**

**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு 1, 2, 3, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் உள்ள ஜெயராமன், நீலகண்டன், துரைசாமி, மோகன், வசந்தம்மாள் ஆகியோர்களை தெரியுமா என்றால் தெரியும். நானும் ஜெயராமனும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் ஆமாம். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி அழைத்து தான் நான் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் விவரம் புலஎண் விஸ்தீரனம் தெரியுமா என்றால் புலஎண் 13/3 ஆஞ்ஜியம்மாள் பெயரில் உள்ளது. 13/1C ஜெயராமனுக்கு வீரராகவநாயுடு செட்டில்மென்ட் எழுதிகொடுத்தார். இந்த வழக்கில் மேற்படி இரண்டு புலஎண்கள் தான் சொல்லப்பட்டுள்ளது என்றாலும்அதில் மட்டும் தான் பிரச்சனை என்றாலும் சரிதான். இது குறித்து தான் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான்.

2. இந்த புலஎண்கள் தவிர வேறு புலஎண்களில் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். எனது சத்தியபிரமாண வாக்குமூலத்தில் பத்தி 2 ல் 15.02.2017 ல் வீரராகவ நாயுடு செட்டில்மென்ட் எழுதி கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. ஆவணத்தை பார்க்காமல் நான் அது குறித்து சாட்சி சொல்ல முடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பிரதாண பிரச்சனை என்ன என்று சொல்லமுடியும் என்றால் சொல்லமுடியும். ஜெயராமனுக்கு கொடுத்த நிலத்தில் ஆஞ்சியம்மாளிடம் அனுமதி பெற்று

வீரராகவநாயுடு குழாய் அமைத்துள்ளார். சுமார் 2500 அடிக்கு குழாய் அமைக்கப்பட்டுள்ளது.

3. எந்த புலஎண்ணிலிருந்து எந்த புலஎண் வரை குழாய் செல்கிறது என்பது தெரியுமா என்றால் புலஎண் 9/6 லிருந்து ஜெயராமநாயுடு நிலம்வரை செல்கிறது. புலஎண் 13/1C ல் சென்று நிற்கிறது. எனக்கு எந்த ஊர் என்றால் எட்டியத்தாங்கல் ஆகும். எனக்கு சொந்த நிலம் உள்ளதா என்றால் உள்ளது. எனது சொத்தின் புலஎண் சொல்லமுடியுமா என்றால் புலஎண் 63 A ஆகும். 63A என்பது பட்டா எண்ணா என்றால் ஆமாம். அதில் A,B,C என உட்பிரிவு உள்ளது. எனது சொந்தநிலத்தின் புலஎண்ணை சொல்லமுடியாத நிலையில் வாதியின் புலஎண்ணை வாதி கூறியதன் பெயரில் நான் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. ஆஞ்சியம்மாள், இரத்தினம் நாயுடு, நரசிம்மநாயுடு, முத்தம்மாள், முருகப்பநாயுடு, துரைசாமி, பீமன், சரோஜம்மாள், நிலம் வழியாக குழாய் வருவதாக சொல்வதில் மேற்படி நபர்களின் நிலங்களின் புலஎண் சொல்லமுடியுமா என்றால் புலஎண் 13 ன் உட்பிரிவு ஆகும். எந்த புலஎண்ணில் கிணறு உள்ளது என சொல்லமுடியுமா என்றால் ஆழ்துளைகிணறு புலஎண் 13/1C ல் உள்ளது. அதில் இரண்டு ஆழ்துளை கிணறு உள்ளது என்றால் ஆமாம்.

4. வேறு புலஎண்ணில் கிணறோ, ஆழ்துளைகிணறோ இல்லை என்றால் சரிதான். மேற்படி ஆழ்துளைகிணற்றிலிருந்து வாதி அவரது நிலத்திற்கு பயிர்செய்து கொள்கிறார் என்றால் ஆமாம். மேற்படி ஆழ்துளைகிணற்றில் மழைகாலம் வெயில்காலம் இரண்டிலும் நீர் இருக்கும் என்றால் ஆமாம். 2 இன்ச் நீர் அதில் செல்கிறது என்றாலும் அது வாதிக்கு போதுமானதாக உள்ளது என்றாலும் ஆமாம். 13/1C ல் பட்டா யார் பெயரில் உள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வாதி ஆஞ்சியம்மாள் வீரராகவருக்கு அனுமதி கொடுத்ததாக சொல்வதில் எழுத்துபூர்வமான அனுமதி எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான்.

5. இவ்வாறு குழாய் அமைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் செட்டில்மென்ட் ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதே போல் எங்கள் ஊரில் வேறுயாரும் இவ்வாறு குழாய் அமைத்து விவசாயம் செய்யவில்லை என்றால் இல்லை. அதிகபேர் அவ்வாறு செய்கிறார்கள். நான் எனது நிலத்திற்கு அவ்வாறு குழாய் அமைத்துள்ளேன் என்றால் எனக்கு பிளாஸ்டிக் பைப் அமைக்கும் அளவிற்கு வசதி இல்லை. நான் சுற்றி வைத்துக்கொள்ளும் சாதாரண குழாய் (Role pipe ) வைத்து

தண்ணீர் பாய்ச்சுகிறேன். நான் தற்போது சொல்வது போல் சுற்றி வைத்துக்கொள்ளும் சாதாரண குழாய் (Role pipe ) வைத்துதான் அனைவரும் தண்ணீர் பாய்ச்சுவார்கள் என்றாலும் நிரந்தரமாக பூமிக்கு அடியில் குழாய் பதித்து தண்ணீர் பாய்ச்சமாட்டார்கள் என்றாலும் சரியல்ல.

6. எனது சத்தியபிரமாண வாக்குமூலத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகள் பூமிக்கு அடியில் குழாய் அமைக்க சம்மதம் தெரிவித்ததாக எந்த இடத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆஞ்சியம்மாளை கேட்டு தான் செய்தார்கள். எனது சத்தியபிரமாண வாக்குமூலத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகள் இந்த இடத்தில் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் அவர்கள் பிரச்சனை செய்யவில்லை. ஆழ்துளைகிணறுக்கு மின் இணைப்பு எந்த வருடம் வாங்கினார் என்றால் 6, 7 வருடம் இருக்கும். எனது சத்தியபிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் தவறு என்றால் சரியல்ல. எனது சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் ஜெயராமன் சொல்லி தான் சொல்கிறேன் என்றால் ஆமாம். **(சாட்சி தற்போது பின்வருமாறு மாற்றி கூறுகிறார்.)** நானாக தான் சொல்கிறேன். எனது சத்தியபிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றால் சரியல்ல.

(மறுவிசாரணை இல்லை)